III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
MCOP.630/2019

Deposition of witness for the Petitioner/PW1
solemnly by Thiru.M.Muthupandi, Junior Assistant,
in accordance with the provision of Act I for 1873 on 27-02-2026

| | | | |
|---|---|---|---|
| Name | : விஜயன் | Village | : |
| Father's / Husband's Name | : கஜேந்திரன் | Calling | : |
| Age | : | Taluk | : |

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

எனது கூடுதல் பிரமாண பத்திரத்தை இன்று தாக்கல் செய்கின்றேன். அதனை எனது கூடுதல் சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எனது ஓட்டுனர் உரிமத்தில் நகல் **ம.த.சா.ஆ.21.** எனது வாகனத்தின் காப்பீட்டு நகல் **ம.த.சா.ஆ.22.** எனது வாகனத்தின் பதிவு சான்றிதழ் **ம.த.சா.ஆ.23.**

**2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் நான் தான் புகார் கொடுத்தேன். சம்பவத்தின்போது எனது இருசக்கர வாகனத்தின் பின்புறத்தில் எனது தாயார் உட்கார்ந்து வந்தார். நான் தான் வாகனத்தை ஓட்டிச் சென்றேன். போலிசில் நான் கொடுத்த புகாரில் நான் தான் தடுமாறி விழுந்ததாக கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல அப்படி கூறவில்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நான் கொடுத்த புகாரிலும் அதன் அடிப்படையில் தாக்கல் செய்திருக்கின்ற முதல் தகவல் அறிக்கையிலும் நான் தான் தடுமாறி கீழே விழுந்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவு மட்டுமே காரணம் என்று சொன்னால் சரியல்ல. TN-12-R-9932 என்ற வாகனத்தின் பதிவு எண் என்னுடைய இரு சக்கர வாகனத்திற்குரியது என்று சொன்னால் சரிதான். இந்த வாகனம் எனக்கு சொந்தமானதால் 3 ஆம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் மட்டுமே இழப்பீடு கொடுக்க கடப்பாடுடையது என்று சொன்னால் சரியல்ல. 2 வது எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்க கடப்பாடுடையவர் அல்ல என்றால் சரியல்ல.

3 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

எனது மோட்டார் சைக்கிளில் எனது தாயார் பின்புறமாக உட்கார்ந்து வந்ததால் நான் கவனமாகத் தான் என்னுடைய மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றேன். நான் போலிசில் கொடுத்த புகாரில் லாரி டிரைவர் மீது தான் தவறு என்று சொல்லியிருக்கின்றேன். முதல் தகவல் அறிக்கையில் லாரி டிரைவர் தான் எதிரியாக காட்டப்பட்டிருக்கின்றார் என்றால் சரிதான். நான் படுர்மேடு கிராமத்தில் குடியிருக்கின்றேன். அது ஒரு குக்கிராமம். என்னுடைய தாயார் டிபன் கடையில் வேலை பார்த்ததை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் என்னிடம் இல்லை. படுர்மேடு குக்கிராமத்தில் டிபன் கடை இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஒரு டிபன் கடை இருக்கின்றது. காலையில் இட்லி, தோசை மட்டும் அங்கு விற்பார்கள். அந்த கடையில் ஒரு நாளைக்கு 1000 ரூபாய்க்கு விற்பனை நடைபெறும். ஒரு நாளைக்கு 1000 ரூபாய்க்கு விற்பனை நடைபெற்றால் ரூ.700/-லாபம் கிடைக்கும். அந்த கடைக்கு என்னுடைய தாயார் தான் ஓனர். அந்த டிபன் கடையில் என்னுடைய தாயார் மட்டும் வேலை பார்த்தார்கள். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அந்த டிபன் கடையில் 500 ரூபாய்க்கு தான் வியாபாரம் நடைபெறும் என்றாலும் அது ஒரு குக்கிராமம் என்றாலும் சரியல்ல. நான் டிபன் கடை நடத்துவதற்கு பஞ்சாயத்தில் லைசன்ஸ் எதுவும் வாங்கவில்லை. என்னுடைய தாயார் டிபன் கடை எதுவும் நடத்தவில்லை என்றாலும் அதிக இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக பொய்யாக சொல்கின்றேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**